செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 150 நாள்: 15/3/17

பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்ட கருவூலம் மற்றும் சார் கருவூலங்கள் முலமாக ஒய்வூதியம் பெறும் சிவில் ஒய்வூதியர்கள், குடும்ப ஒய்வூதியர்கள், ஆசிரியர் ஒய்வூதியர்கள் மற்றும் சிறப்பு ஒய்வூதியர்கள் அனைவருக்கும் 2017-18 ஆம் ஆண்டுக்கான நேர்காணல் (Annual Mustering) ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2017 மாதங்களில் மாவட்டக் கருவூலத்திலும், சார் கருவூலங்களிலும் நடைபெற உள்ளது.

ஒய்வூதியர்களுக்கான நேர்காணலை (Annual Mustering) எளிதாக்க ஜீவன் ப்ரமான் இணையதளம் (Jeevan Pramaan Portal) முலமாக அரசு இ-சேவை மையம் மற்றும் பொது சேவை மையங்களின் உதவியுடன் Digital Life Certificate செய்து கொள்ளும் வசதிக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, மாவட்ட கருவூலம், வேலூர் மற்றும் அந்தந்த சார் கருவூலங்கள் முலமாக ஒய்வூதியம் பெறும் ஒய்வூதியர்கள் 2017-18 ஆம் ஆண்டுக்கான நேர்காணலை வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் உள்ள இ-சேவை (e-seva centre) மையங்கள் மற்றும் பொது சேவை மையங்களில் ஜீவன் ப்ரமான இணையதளம் (Jeevan Pramaan Portal) முலமாக ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2017 மாதம் வரை நேர்காணல் (Annual Mustering) செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. நேர்காணல் செய்த உடன் மேற்படி சேவை மையங்களில் Digital Life Certificate வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலங்களில் நேர் காணலுக்கு வரும் ஒய்வூதியர்கள், தங்களின் ஒய்வூதிய புத்தகத்துடன், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பான் கார்டு, வங்கி கணக்கு பாஸ் புத்தகம் நகலை கொண்டு வருமாறு தெரிவிக்கப்படுகிறது. மேற்படி மாதங்களில் நேர் காணல் செய்ய தவறும் ஒய்வூதியதாரர்கள் ஒய்வூதியம் ஆகஸ்ட் 2017 முதல் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணையதள முகவரி: www.jeevanpramaan.gov.in

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

செ.ம.தொ.அ.
வேலூர். 15/3/17